# சார்வரி வருட

## சித்திரைப் புத்தாண்டு பலன்கள்

**2020 சித்திரை முதல் 2021 பங்குனி வரை**



**வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி**
**12 இராசிகளுக்குமான பலன்கள்**

சர்வசக்தி வெளியீடு

சோதிடர் **திருச்செல்வம் தவரத்தினம்**
சடையாளி, காரைநகர்

விலை
**60.00**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்வரி வருஷ

## சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

*(2020 சித்திரை முதல் 2021 பங்குனி வரை)*

# 12 இராசிகளுக்குமான பலன்கள்

## வாக்கிய பஞ்சாங்க கணிப்பின்படி பலாபலன்கள்

சர்வசக்தி வெளியீடு


**சோதிடர் தி.தவரத்தினம்**

(BA, PGED, Dip.in Fsc.Sp.Trd.W.R, SLPS - 3)

சடையாளி, காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிட அன்பர்களுக்கு

சோதிடமானது ஆன்மீக, அறிவியல் சார்ந்த ஒரு கலையாகும். ஆதியந்தமில்லா இறையருளின் துணைகொண்டு பிரபஞ்ச இயங்கியலை முன்கூட்டியே அறிந்து ஒருவருக்கு வரும் சாதக, பாதகங்களை சீராக்கி எமது வாழ்க்கைப் பயணத்தை நன்னிலையில் நடாத்திச் செல்ல சோதிட பலன்கள் உதவுகின்றன.

அண்டத்திலும், பூமியிலும் இறைசக்தியும், நவநாயகர்களின் இயக்கமும் நம் வாழ்வின் நலனுக்கு ஆதாரமானவை. இந்த இயங்கியலை முன்கூட்டியே அறிவதனால் இன்பம், துன்பம், ஆரோக்கியம், ஆயுள் என்பனவற்றை சோதிட காலக் கண்ணாடியில் கண்டுகொள்ளலாம்.

எல்லாவற்றையும் கடந்த அறிவு, ஆற்றல், இறைசக்தியின் இயக்கம் என்பதை நாம் விளங்கிக் கொள்வோம். இறை சக்தியையும், நவநாயகர்களதும் அருள் சக்தியை நாம் பெறும் வகையில் வாழ்ந்து மெஞ்ஞானவர்களின் அருள் கடாட்சத்தால் உங்கள் வாழ்க்கை பயணத்தை வெற்றி கொள்வீர்களாக. இங்கே கூறப்பட்ட இராசி பலன்கள் கோட்சார ரீதியாக பொதுமைப்படுத்தப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சாதக அமைப்பே உங்களுக்கு சரியான பலனைக் கொடுக்கும் ஆயினும் வருடப் பொதுப்பலன்கள் உங்களுக்கு பொருந்தி வரக்கூடியனவாகவும் இருக்கும்.

இராசிக்கும், லக்கனத்திற்கும் பலன்களைக் கூறமுடியும். எமது வாழ்க்கைக் கோலமும் ஒருவரது பலாபலனில் தீமைகளை குறைத்து நன்மையளிக்கும் அதற்கு அந்த சாதகர் மானிட நெறியில் வாழ்பவராக இருக்க வேண்டும்.

மேலும் சிறிய நற்பலனும் மலைபோல பெரிதாக நல்ல பலன்களையும் கொடுத்துவிடும். எனவே நன்மையும், தீமையும் எமது செயற்பாட்டிலேதான் தங்கியுள்ளது.

பூர்வ புண்ணியமும், தெய்வபலமும் இருந்தால் வாழ்வில் நாம் நலமுடனே வாழலாம்.

மேலான இறைவனையும் நவநாயகர்களையும், ஞானசித்த சற்குருக்களையும் வணங்கிப் போற்றி நற்பண்புள்ள வாழ்க்கை முறை மூலம் எமது வாழ்வை வளம்படுத்திக் கொள்வோமாக.

## "சார்வரி வருட இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்"

சடையாளி, காரைநகர்.

சோதிடர் தி.தவரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்வரி வருஷ
# சித்திரைப் புத்தாண்டுப் பலன்கள்

பிறக்கும் சார்வரி வருஷம் இராசா - புதன் ஆகிறார். இதனால் வித்தை விருத்தி ஏற்படும். மந்திரி - சந்திரன் எனவே பயிர் செழிப்பு உண்டாகும். சேனாதிபதி - சூரியன் ஆகவே படைத்துறையினரால் ஆட்சி மேலான்மை உண்டாம்.

தானியாதிபதியாக - செவ்வாயும், ஸஸ்யாதிபதியாக - வியாழனும் ஆவதால் சிறுதானிய விளைச்சல் உண்டாம். இராசியாதிபதி - சனி என்பதால் தாக்கங்கள் அதிகமாக இருக்குமாம். சோதிடத்தில் தமிழ் வருடங்கள் அறுபது. இவை மாறி மாறி வருகின்றன. ஆயினும் "மாற்றமாம் வையகத்தே" என்பதற்கேற்ப பலன்களிலும், கால பலன்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

சித்திரைப் புத்தாண்டுப் பொதுப் பலன்களாக வருடம் பிறக்கும் நாள் நவநாயகர்கள், வருட சங்கராந்தி பலன்கள், காலமாற்றம் என்பன ஒன்றிணைந்ததாக உள்ளது. வானுலக கிரக சஞ்சாரங்கள் பூலோகத்தில் உயிர்கள், உயிரற்ற பௌதீக நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தி பலாபலன்களை உருவாக்குகின்றன.

சூரிய பகவான் மீன இராசியில் இருந்து தனது உச்ச வீடாகிய மே இராசிக்கு செல்வதே புத்தாண்டு பிறக்கும் நேரமாகும். சூரியபகவான் மேட இராசியில் பிரவேசிக்கும் காலம் முதல் வசந்த காலம் ஆரம்பமாகின்றது.

வான மண்டலத்தில் கோள்களின் இயக்கம் சதா நிகழ்கின்றது. இந்த இயக்கத்தின் விளைவால் ஏற்படும் மாற்றங்கள் மனிதர்களிடையே அவர்களின் வாழ்விலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இதுவே புதுவருடப்பிறப்பு பலன் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்வரி வருஷ
# வருடப்பிறப்பு விபரணம்

மலர்கின்ற சித்திரைப் புத்தாண்டு விகாரி வருஷம் பங்குனி 31ம் திகதி **(13.04.2020)** திங்கட்கிழமை முன்இரவு **7.26** மணிக்கு அபரபக்க ஷஷ்டி திதியும் மூலநட்சத்திரம் 4ஆம் பாதத்தில் **சார்வரி வருஷம்** பிறக்கின்றது. **அன்று விஷ புண்ணிய காலம் மாலை 3.36 மணி முதல் முன்னிரவு 11.26 மணி வரையாகும்.** இக்காலத்தில் யாவரும் விதிப்படி மருத்துநீர் வைத்து சிரசில் இலவமிலையும், காலில் விளாவிலையும் வைத்து நீராடி **வெண்ணிற** அல்லது **வெள்ளைக்கரை** புதிய ஆடை அணிந்து குல தெய்வங்களையும், குரு, பெற்றோரையும் வணங்கி புதுவருஷத்தை மகிழ்வாக வரவேற்போமாக.

மறுநாள் **(14.04.2020) செவ்வாய்க்கிழமை** அதிகாலை துயில் எழுந்து மங்களப் பொருட்களைத் தரிசித்து சூரியனுக்குப் பொங்கல் பொங்கி தானதர்மம் செய்து உற்றார், உறவினர், நண்பர்களுடன் மகிழ்ந்திருங்கள்.

**வருடப்பிறப்பு தோஷ நட்சத்திரங்கள்**

அச்சுவினி, கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் ஆம் பாதம், ரோகினி, மிருகசீரிடம், 2ஆம் பாதம் மகம், மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம் ஆகிய நட்சத்திரத்தில் பிறந்தோர் தவறாது மருந்துநீராடி தோஷ பரிகாரம் செய்வதால் நன்மை தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைவிஷேட கொடுக்கல் வாங்கல்கள்**

16.04.2020 - வியாழக்கிழமை 03.08 - 04.05மணிவரை
16.04.2020 - வியாழக்கிழமை இரவு 10.37 - 12.33
20.04.2020 - திங்கட்கிழமை 12.05 - 01.46 மணிவரை

**குரு, இராஜ, சினேகிதர் சந்திப்பு**

23.04.2020 - வியாழக்கிழமை 03.02 - 03.32மணிவரை
27.04.2020 - திங்கட்கிழமை 01.30 - 03.18 மணிவரை

**வித்தியாசாலை, கல்வி ஆரம்பம்**

20.04.2020 - திங்கட்கிழமை
காலை 09.15 - 09.45 மணி வரை
மதியம் 12.06 - 01.46 மணி வரை
27.04.2020 - திங்கட்கிழமை
மதியம் 12.42 - 01.18 மணி வரை

**விருந்தினர் உபசாரம்**

20.04.2020 - திங்கட்கிழமை
மதியம் 12.06 - 01.46 மணி வரை
24.04.2020 - வெள்ளிக்கிழமை
காலை 8.00 - 09.15 மணி வரை

**வியாபாரம், புதிய கணக்கு ஆரம்பம்**

16.04.2020 - வியாழக்கிழமை 03.08 - 04.05 மணி வரை
20.04.2020 - திங்கட்கிழமை 12.05 - 01.42 மணி வரை

**விவசாய / பூமி பலித முயற்சி**

20.04.2020 - திங்கட்கிழமை 12.06 - 01.41 மணி வரை
29.04.2020 - புதன்கிழமை 11.40 - 01.54 மணி வரை

**வருட சிறப்பு வர்ணம் - வெள்ளை, மஞ்சள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சார்வரி வருடப்பிறப்பு இராசிச் சக்கரம்

<table>
<tr><td>புதன்</td><td>சூரியன்</td><td>சுக்கிரன்</td><td>ராகு</td></tr>
<tr><td></td><td colspan="2" rowspan="2">சார்வரி வருட<br>கிரகநிலை</td><td></td></tr>
<tr><td>செவ்வாய்<br>குரு</td><td></td></tr>
<tr><td>சந்திரன்<br>சனி<br>கேது</td><td></td><td>லக்கினம்</td><td></td></tr>
</table>

## ஆதாய விரய பலன்கள்

| இராசி | பலாபலன் | ஆதாயம் | விரயம் |
|---|---|---|---|
| மேடம் | சமசுகம் | 5 | 5 |
| இடபம் | சுகம் | 14 | 11 |
| மதுனம் | அதிகநஷ்டம் | 2 | 11 |
| கர்க்கடகம் | சமசுகம் | 2 | 2 |
| சிங்கம் | அதிகஇலாபம் | 14 | 2 |
| கன்னி | அதிகநஷ்டம் | 2 | 11 |
| துலாம் | சுகம் | 14 | 11 |
| விருச்சிகம் | சமசுகம் | 5 | 5 |
| தனு | நஷ்டம் | 8 | 11 |
| மகரம் | இலாபம் | 11 | 5 |
| கும்பம் | இலாபம் | 11 | 5 |
| மீனம் | நஷ்டம் | 8 | 11 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்வரி வருஷப் பொதுப்பலன்கள்

- காற்றுடன் கூடிய மழை.
- வெளிநாட்டு பொருட்களின் விலை ஏற்றம்.
- சனங்களுக்கு மனதில் பயநிலை.
- இராஜாங்களின் பீடங்களில், தேசங்களில் தாக்கம்.
- நோய்த்தாக்கங்களின் விருத்தி.
- அறிவு விருத்தியடைதல்.
- நீர் தொடர்புடைய தொழில் விருத்தி.
- இராஜ பீடங்களில் தாக்கம். (கலகம்)
- மறைமுக ரோக நிலை ஏற்படல்.
- போக்குவரத்தில் இடையூறுகள் சேதங்கள் ஏற்படல்.
- அதர்ம வழி செல்வோர் அடக்கப்படுவர்.
- நீதி நியாயங்கள் நிலை நாட்டப்படுதல்.
- கல்வி விருத்தி உண்டாம்.
- கல்வியாளர் கௌரவிக்கப்படுவர்.
- அக்கினிபயம் உண்டாம்.
- வாசனைத் திரவியங்களும், நவரத்தினங்களும் விளையும்.
- ஆன்மீக வேடம் பூண்டோருக்கு போட்டிகள், சோதனைகள் ஏற்படலாம்.
- உலக நாடுகளில் வறண்ட காற்று வீசுதல்.
- புதிய சட்டங்கள் பல இயற்றப்படுதல்.
- பெண்களுக்கு கழுத்து பகுதி, சுரப்புக்களில் நோய்த்தாக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேடம்

இராசி மண்டலத்தில் முதலாவது இராசியாகும். இந்த இராசி அன்பர்கள் சமூக மதிப்பும், கௌரவமும் உடையவர்கள். சிலரின் கண்கள் சிவந்த தோற்றத்தில் அமைந்திருக்கும். தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் கொண்டவர்கள். சிலர் அகங்காரத் தன்மை கொண்டவர்களாகவும் காணப்படுவர். தெய்வபக்தி உடையவர்கள். கொள்கையில் உறுதியான தன்மையும் துணிச்சலும் கொண்டவர்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு சமசுகம் நல்கும் ஆண்டாக அமைகிறது. சிலருக்கு திடீர் வெளியூர் பிரயாணங்கள் அமையும். உடல் மெலிவு காணப்படும். வருட ஆரம்பத்தில் சுமாரான பலன்களும் பொருட் செலவுகளும் உறவினர், நண்பர் உதவிகளும் அவர்களால் சிலருக்கு கவலைகளும் உருவாகலாம்.

ஆவணியின் பின் நற்காலமாகும். புதிய முயற்சிகள், நற்புகழ் கிடைத்தல், காரிய விக்கினம் நீங்கப்பெறும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை.

**துர்க்கை அம்மனை வணங்கி வாருங்கள்**
**துன்பங்கள் பறந்தோடும்**

2020இல் இடம்பெற இருக்கும் சனிமாற்றம் இந்த ஆண்டு உங்களுக்கு நன்மை கொடுத்திடும்.

***உத்தியோகத்தர்களுக்கு*** **:-** இடமாற்றங்கள் ஏற்படலாம். அதனால் வீண் அலைச்சல் நிம்மதிக் குறைவு காணப்படலாம். பிறருக்கு கீழ்ப்படும் நிலையும், சினேகிதரால் நன்மையும் ஏற்படும்.

***வியாபாரிகளுக்கு*** **:-** முதலீடுகளிலும், கொடுக்கல் வாங்கல்களிலும் அவதானம் தேவை. புடவை வியாபாரிகள் தொழில் முன்னேச்சரிக்கையாக இருக்க வேண்டிய காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பெண்கள் :-*** பிரயாணங்கள் அமையும். திருமணமாகாதோருக்கு திருமண வாழ்க்கை கைகூடி வரும். இல்லச் சிறப்பும் தானதரும செய்கையில் நாட்டம் ஏற்படும்.

***மாணவர்களுக்கு :-*** கல்வித்துறையில் அதிக அக்கறை செலுத்தி கல்வி கற்கவேண்டிய காலமாகும். விஞ்ஞானத்துறை மாணவர் நற்பெறுபேற்றைப் பெறுவர்.

***விவசாயிகளுக்கு :-*** சிவந்த தானியங்கள் விளைச்சல் அதிகமாகும். முயற்சிக்கேற்ப நல்ல ஆதாயம் கிடைக்கும்.

***அரசியல்வாதியினருக்கு :-*** அயல்தேசங்களில் பிரயாணம் அடிக்கடி ஏற்படும். அதிகாரவிருத்தி ஏற்படும். மக்கள் பலம் அதிகரிக்கும்.

***அச்சுவினி :-*** வெளியூர் பிரயாணங்கள் அமையும், செலவுகள் உருவாகலாம், எடுக்கும் கருமங்கள் தடைதாமதங்களின் பின் நிறைவேறும். உடல் மெலிவும், நோய்த் தாக்கங்களும் அவ்வப்போது வந்துசேரும்.

***பரணி :-*** செய்கருமங்களில் அவதானம் தேவை, சினேகிதரால் இலாபம் உண்டு, ஆண்டு முற்பகுதியில் திரவிய இலாபமும் பிரயாணங்களும் ஏற்படும். ஆவணியின் மேல் பொருட்செலவுகளும் தொழிற் பாதிப்புக்களும் உருவாகலாம்.

***கார்த்திகை (1ஆம் பாதம்) :-*** குலதெய்வ அனுக்கிரகம் உண்டு. எடுக்கும் முயற்சிகள் பலிதமாகும். விரும்பிய பொருட்கள் கிடைக்கும். மனதில் புதுத்தெம்பும், மனமகிழ்ச்சியும் இருக்கும். நண்பர் உறவினர்களால் இலாபம் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இடபம்

இராசி மண்டலத்தில் இரண்டாவது இராசி இது ஆகும். இவர்கள் நல்ல உழைப்பாளிகளாக விளங்குவர். பகுத்தறிவாளராகவும், சிந்தனைத்திறன் மிக்கவர்களாகவும் காணப்படுவர். அழகுக் கலைகளில் ஆர்வம் மிக்க ஈடுபாடு உடையவர். அழகானவர்கள், உலகியல் இன்பம் காண ஆசைப்படுபவர்களாகவும் காணப்படுவர்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு நற்பலன்களைக் கொடுக்கும் ஆண்டாக அமைகின்றது.

நீண்ட காலமாக திட்டமிட்ட திட்டங்கள் நன்கு நிறைவேறும். உடல் ஆரோக்கியம் சிறப்படைகிறது. புது உற்சாகம் பிறக்கும்.

உங்கள் பொருளாதார வளம் சிறப்படையும். அரசு, இராஜாங்க உதவிகள் வேலைகள் அனேகருக்கு கிடைக்கும். அயல்நாட்டு அல்லது நீண்டதூர பிரயாணங்கள் கைகூடிவரும். பகைவர் தூர விலகுவர்.

சிலருக்கு குடும்பத்தில் வாக்குவாதங்கள் ஏற்படலாம். விஷ பிராணிகளினால் தாக்கங்கள் ஏற்படலாம். அவதானம் தேவை.

பூமியால் இலாபமும், நிதி பரிமாறும் இடத்தில் வேலை புரிவோரால் நன்மைகளும், அவர்களுக்கு ஆதாயமும் ஏற்படுமாம். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை.

**முருகனை வழிபாடாற்றுங்கள் முன்செய்**
**கன்ம வினைகள் அகன்று மங்களம் உருவாகும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** உங்கள் செய்தொழிற்பணி சிறக்கும். சம்பள அதிகரிப்பும், பதவி உயர்வுகளும் ஏற்படும். அரச பாராட்டுக்களைப் பெறுவீர்கள். சிலருக்கு விரும்பாத இடமாற்றங்கள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகளுக்கு :-*** வர்த்தக நடவடிக்கைகள் வரிவடையும். இலாபம் அதிகரிக்கும். அழகுசாதன பொருட்கள் வியாபாரம் செய்வோர் அதிக நன்மையடைவர்.

***பெண்கள் :-*** உங்கள் இல்லத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும். வருடபிற் பகுதியில் திருமணமாகாதோருக்கு சுபமங்கள நிகழ்வுகள் கைகூடிவரும்.

***மாணவர்களுக்கு :-*** இசை நடனத்துறை மாணவர் நன்மையடைவர். ஏனையோர் அதிக கவனமும், முயற்சியும் உடையவராக இருக்க வேண்டும்.

***விவசாயிகளுக்கு :-*** விவசாய விருத்தி ஏற்படும். பணப்பயிர் செய்வோர் இலாபம் அடைவர். பல்லாண்டு பயிர் செய்வோர் அதிக இலாபம் அடைவர்.

***அரசியல்வாதிகளுக்கு :-*** வருட ஆரம்பத்தில் அவதானம் தேவை. ஆண்டு பிற்பகுதியில் புதிய ஸ்தானம் பலவித பேறுகள் கிடைக்குமாம். அதிகார சிறப்பு ஏற்படும்.

***கார்த்திகை (2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள்) :-*** பூமியால் நன்மை உண்டாம். நீரினால் நன்மையுண்டு. இராசாங்க மதிப்பு மரியாதை கிடைக்கும். எடுக்கும் முயற்சி வெற்றி தரும். சினேகிதர் விரோதம் ஏற்படலாம் அவதானம் தேவை.

***ரோகினி :-*** குடும்பத்தில் சுபமங்கள நிகழ்வுகள் நடக்கும், மனம் அலைபாயும். தொழில் சிறப்பு உண்டு. தனதானிய நன்மையும் காரிய சித்தியும் உண்டாம்.

***மிருகசீரிடம் :-*** செய்தொழில் விருத்தியடையும். ஆண்டின் முற்பகுதியில் எடுக்கும் முயற்சிகள் பலிதமாகும். ஆவணியிலிருந்து கார்த்திகை வரை வரவை விட செலவு அதிகமாகும். ஆண்டு பிற்பகுதி தன, தானிய விருத்தி உண்டு. தூரதேச பிரயாணங்கள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மிதுனம்

இராசி மண்டலத்தில் மூன்றாவது இராசி ஆகும். இவர்கள் அறநெறியாளர்கள், சாஸ்திர சம்பிரதாயங்களை மதிக்கும். பண்புடையவர், எண்கணித தேர்ச்சி மிக்கவர்களாவர். சிலர் அதிகம் நெருங்கியாருடனும் பழகமாட்டாதவர்களாகக் காணப்படுவர். உறுதியும் விடாமுயற்சியும் கொண்டவர்கள். நற்பழக்கங்கள் உடையவராக விளங்குவர். விஞ்ஞான வர்த்தகத் துறைகளில் சிறந்து விளங்குவார்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு ஏற்ற இறக்கமான பலன்களை வழங்கவுள்ளது. மனம் சோர்வடையாமல் இருப்பதற்கு இறை நம்பிக்கையுடன் இருங்கள்.

உடல் நிலையில் அவ்வப்போது தாக்கங்கள் ஏற்படலாம். நம்பிக்கைப்பொறுப்பு, கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை.

சிலருக்கு சூனிய ரோகத் தாக்கமும், குருதி தொடர்பான நோய்களும் ஏற்படலாம், அவதானம் தேவை. உரிய பரிகாரம் செய்வது நலம் தரும்.

மன மகிழ்ச்சியும், காரியனுகூலங்களும் ஏற்படும். பிரயாணங்களில் காலதாமங்கள் இடையூறுகள் ஏற்படலாம். அவதானம் தேவை.

**மகாவிஷ்ணுவையும், ஐயப்பனையும் வணங்கி வாருங்கள் நன்மைகள் கைகூடி வரும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** உங்கள் மேலதிகாரிகளால் கண்டிப்புக்களாக வேண்டிவரும். அலைச்சலும் மன நிம்மதிக் குறைவுகளும் உண்டாம். விரும்பாத இடமாற்றங்கள் சிலருக்கு ஏற்படுமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகள்*** :- வியாபாரத்தின் பொருள் முதலீட்டில் அவதானம் தேவை. ஆடை வியாபாரிகளுக்கு அவதானம் தேவை. ஐப்பசியின் மேல் பொருளாதாரவிருத்தி, சுபமங்கள யோகங்கள் உண்டாம்.

***பெண்கள்*** :- புத்திரர், உறவினரால் மனக்கவலை ஏற்படலாம். கண் தொடர்பான நோய்களும், கழுத்து பகுதியில் தாக்கமும் ஏற்படலாம்.

***மாணவர்கள்*** :- உங்கள் ஆற்றலில் அதிக கவனம் எடுத்து படிக்க வேண்டிய காலமாகும். கணனி, பொறியில் மாணவர் சிறப்பு தோர்ச்சியடைவர்.

***விவசாயிகள்*** :- பயிர்விருத்தியாலும், தன, தானிய விளைவுகள் நன்றாக அமையும். கண்களில் தாக்கம் ஏற்படலாம். அவதானம் தேவை.

***அரசியல்வாதிகளுக்கு*** :- போட்டிகள் அதிகரிக்கும். பிறதேச சஞ்சாரம் ஏற்படும். உங்கள் வாக்கால் கலகங்களும் அபிப்பிராய பேதங்களும் உருவாகும். அவதானம் தேவை.

***மிருகசீரிடம் (3ஆம், 4ஆம் பாதம்)*** :- தெய்வானுகூலத்தால் காரிய சித்திபெற வழிபாடாற்றுங்கள். பொருள் சேதங்களும் மனச் சஞ்சலங்களும் ஏற்படலாம்.

***திருவாதிரை*** :- எடுக்கும் காரியங்களில் தடை தாமதங்கள் வருட முற்பகுதியில் ஏற்படலாம். பிற்பகுதி காரிய சித்தியும் தொழில் அலைச்சலும் உருவாகலாம். நோய்த் தாக்கம் காணப்படும். உண்ணும் உணவில் அவதானம் தேவை.

***புனர்பூசம் (1ஆம், 2ஆம், 3ஆம் பாதம்)*** :- அதிக முயற்சிக்கு அற்ப இலாபம் கிடைக்கும். ஆன்மீக, தரும வழியில் ஈடுபாடு அதிகரிக்கும். வருட பிற்பகுதியில் காரிய அனுகூலமும், தொழிற்சிறப்பும் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கடகம்

இராசி மண்டலத்தில் நான்காவது இராசியாகும். இவர்கள் கலைகளில் நாட்டம் உடையவர்களாகவும், ஆக்கபூர்வமான சிந்தனை உடையவராகவும், வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற சிந்தனை உடையவர்கள். அலைபாயும் மனநிலையும் கொண்ட நீங்கள் நட்புக்கு இலக்கணமாகத் திகழ்வீர்கள். வாழ்க்கையில் செல்வம், புகழ் பெற்றவர்கள். காடுகள் அல்லது நீர்நிலைக்கு அண்மையில் வசிப்பவர் அல்லது பிறந்தவர்களுக்கு வாழ்வில் பல யோகங்கள் உண்டாகும்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு சமசுக பலன்களை வழங்கவுள்ளது. வருட ஆரம்பத்தில் அதிக பிரயாசையும் அற்ப இலாபமும், மாற்றங்களும் ஏற்படும். அடிக்கடி பிரயாணங்களும் ஏற்படுமாம்.

ஆனியின் மேல் எடுக்கும் முயற்சிகள் நன்றாக அமையும். குடும்ப நன்மை உண்டாம். புதிய முயற்சியில் உற்சாகமும் ஊக்கமும் ஏற்படும். சிநேகிதர்களால் நன்மையும், கொடுக்கல் வாங்கல்கள் அனுகூலமாக அமையும்.

உங்களின் வாக்கு வசீகரத்தால் காரியானுகூலமும் சத்துரு வெற்றியும் ஏற்படும். இராஜாங்க வெகுமானங்களும் பாராட்டும் கிடைக்குமாம்.

**பராசக்தி அம்மனை வழிபட்டு வாருங்கள்**
**நன்மைகள் அதிகரிக்கும்**

***உத்தியோகத்தர்களுக்கு*** **:-** இடமாற்றங்கள் ஏற்படும். மேலதிகாரிகளாக இருப்பவர்களுக்கு வேலையாட்களால் அபிப்பிராய பேதம் ஏற்பட்டு மறையும். அதிகார விருத்தி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகளுக்கு*** :- முதலீடுகளில் அவதானம் தேவை. வாடிக்கையாளரை தேடிச்சென்று பொருள்கள் விற்கும் வியாபாரிகள் அதிக இலாபம் அடைவர்.

***பெண்கள்*** :- குடும்ப மகிழ்ச்சியும், சுபமங்கள காரியங்களும் திருமண வயதில் உள்ளவர்களுக்கு உண்டாம். நற்கீர்த்தியும் ஆடை, ஆபரணச் சேர்கையும் உண்டாம்.

***மாணவர்களுக்கு*** :- பரிசு பாராட்டுக்களை கலைத்துறை மாணவர் பெறுவர். கல்வியில் சிரத்தை அதிகம் காட்ட வேண்டிய காலமாகும்.

***விவசாயிகளுக்கு*** :- பயிர் விருத்தியடையும். வருட முற்பாகம் மந்தமான நிலையையும், ஆவணியின் மேல் தானிய நிறைவும் நன்மைகளும் உண்டாம்.

***அரசியல் வாதிகளுக்கு*** :- அபிப்பிராய பேதங்கள் அதிகரிக்கும். ஆயினும் வாக்கு வசீகரத்தால் பொதுசன மதிப்பு மரியாதை அதிகரிக்கும். அதிகார விருத்தியுண்டாம்.

***புநர்பூசம் (4ஆம் பாதம்)*** :- உங்கள் பொருட்களில் அவதானம் தேவை. பொருட்கள் களவு போகலாம். மனச் சஞ்சலமும் செய்கருமங்களில், தடை தாமதங்களும் ஏற்படலாம்.

***பூசம்*** :- தெய்வீக நாட்டமும், வழிபாடுகளும் அதிகரிக்கும். நண்பர், உறவினர் உதவுவார்கள் காரிய பலிதமும், திரவிய இலாபமும் உண்டாம்.

***ஆயிலியம்*** :- வரவுக்கு மீறிய பொருட் செலவுகள் உருவாகும். உடல் நிலையில் தாக்கம் ஏற்படலாம். ஆவணியின் மேல் சிறந்தபலன்கள் அதிகரிக்கும். செய்தொழிலால் நன்மைகள் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்கம்

இராசி மண்டலத்தில் ஐந்தாவது இராசியாகும். இவர்கள் தலைமை தாங்கும் தனிச்சிறப்பு உடையவர்கள். உறுதியான உடற் கட்டமைப்புக் கொண்டவர்கள். தரும காரியங்களை முன்நின்று செய்வர். கடின உழைப்பும், அதிக முயற்சியும், எளிதில் மனச் சோர்வு அடையாதவர்களாவும் விளங்குவர். சாந்த குணமும் கோபமும் உடையவராகக் காணப்படுவர். எதிரிகளை வெல்லும் விடா முயற்சியாளர்கள். பிறருக்கு கட்டுப்பட்டு பணிந்து பணியாற்றா தவர்கள் நீங்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு அதிக இலாபகமானதாக அமைகின்றது.

வருட ஆரம்பத்தில் மத்திம பலன் காணப்படும். பிற்பகுதி சிறப்பானதாக அமையுமாம். நோய்த்தாக்கம் ஏற்பட்டு உடல் ஆரோக்கியம் ஏற்படும்.

தனதானிய விருத்தியும், வெள்ளை நிற பொருட்களால் திடீரென அதிஸ்டமும் உங்களுக்கு கிடைக்கும்.

சகோதரர்களால் நன்மையும் அன்னிய தேச வேலைகளும் கிடைக்கும். அதனால் அதிஷ்டமும் நன்மைகளும் உண்டாம். முன்னாள் முயற்சிகளால் ஏற்பட்ட பலாபலன்கள் உங்களுக்கு இந்நாள் கிடைக்கும். அதனால் உங்களுக்கு சாதகமான விடயங்களில் ஈடுபடுங்கள். புதிய முயற்சிகளில் ஈடுபடாதீர்கள்.

**சிவ வழிபாட்டால் சங்கடம் தீர்ந்து**
**நன்மைகள் உருவாகும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** தொழில் துறையில் அலைச்சலும் நிம்மதிக் குறைவும் ஏற்படுமாம். அதிக முயற்சிக்கு அற்ப பலன் கிடைக்குமாம். ஆவணியின் மேல் நற்பலன் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகளுக்கு*** **:-** பொருள் சேதம் உண்டாம். பயிர் விருத்தி ஏற்பட்டு இலாபம் கிடைக்கும். கிழங்கு வகைகளை விற்பனை செய்வோர் நன்மையடைவர்.

***பெண்கள்*** **:-** குடும்பத்தில் மனஸ்தாபங்கள் ஏற்படும். சரீர பலன் குறையும். தேக மெலிவும் ஏற்படும். மார்கழியின் மேல் நற்பலன் உண்டாகும்.

***மாணவர்களுக்கு*** **:-** கணிதம், பொறியியல், தொழில்நுட்பத்துறை மாணவர் நன்மை அடைவர். கல்வியல் விடாமுயற்சியுடன் கவனம் செலுத்தவும்.

***விவசாயிகளுக்கு*** **:-** ஏற்றுமதிப் பயிர் செய்வோர் இலாபம் ஈட்டுவர். சிவந்த பழம், தானிய வகை விளைவிப்போர் அதிக இலாபம் அடைவர்.

***அரசியல்வாதிகளுக்கு*** **:-** உற்றசகாக்களால் போட்டியும் மன உளைச்சலும் ஏற்படும். பொறுமையுடன் இருக்க வேண்டிய காலமாகும். ஆவணியின் மேல் நற்பலன் உண்டாகும்.

***மகம்*** **:-** நண்பர், உறவினரால் திரவிய இலாபம் உண்டாம். எடுக்கும் காரியங்கள் நன்மையாக முடியும். தெய்வானுகூலமும் தொழில் விருத்தியும் குடும்ப நன்மைகளும் உண்டு.

***பூரம்*** **:-** இறை வழிபாட்டால் விரும்பிவை கிடைக்கும். அறிவு மேன்மையால் பரிசு, பாராட்டு உண்டு. நல்ல உடலாரோக்கியம் ஏற்படும்.

***உத்தரம் (1ஆம் பாதம்)*** **:-** மனம் அலைபாயும், மனச்சோர்வு, மனச்சஞ்சலம் இருக்கும். பிரயாணங்களில் அதிக செலவுகள் ஏற்படும். பொருள் சேதமும், செய்தொழிலில் அதிக பிரயாசைக்கு அற்ப பலனும் உண்டாம். வெளிநாட்டு உதவிகள் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னி



இராசி மண்டலத்தில் ஆறாவது இராசியாகும். இவர்கள் இசை, சாஸ்திரஞானமுடையவராகவும், கணித, விஞ்ஞான புலமை மிக்கவராகவும், அழகானவர்களாகவும் விளங்குவர். உயர் பதவிகளை அலங்கரிப்பர். அதிகம் கதைக்கமாட்டார்கள். பிறரின் கருத்துக்களுக்குத் தலை அசைப்பர். ஆனால் காரியத்தில் கண்ணாய் இருப்பர். கடின உழைப்பு கொண்டவர்களாகவும் விளங்குவர். பகலிலே சுறுசுறுப்பும் மாலையிலே சோர்வையும் நீங்கள் உணர்வீர்கள். மொழிப் புலமையாளர்கள் பேச்சாற்றல் கொண்டவர்கள் நீங்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு வருட ஆரம்பத்தில் சுப பலனையும் பின் அனுகூலமற்ற நிலையையும் ஏற்படுத்தலாம்.

உடல் நிலையில் வாத நோய்த்தாக்கம் ஏற்பட்டு விலகும் கெட்ட மனிதரின் நட்பால் வாக்குக் கலகமும், கேடும் ஏற்படலாம்.

முன்பின் அதிகம் அறிமுகம் இல்லாதவருடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடவேண்டாம். இதனால் வீண்பழி கேட்க வேண்டிவரும்.

ஆனியின் மேல் நற்பலன்கள் அதிகரிக்கும். சுபகாரிய சித்தி, சயன, போசன சுகமும், நற்கீர்த்தியும் உண்டாகும்.

சிலருக்கு தொழில் மாற்றம் ஏற்பட்டு பணம், பொருள் வந்துசேரும். வீடு, வாகன நன்மைகளும் ஏற்படும்.

**மஹா விஸ்ணுவையும் மகா லட்சுமியையும் வணங்கி வாருங்கள் நன்மை அதிகரிக்கும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** அனுகூலமான இடமாற்றங்கள் கிடைக்கும். ஊதிய உயர்வும் கிடைக்கும், சிலர் புதிய துறைகளுக்கு மாற்றப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகளுக்கு*** **:-** இறக்குமதிப் பொருட்களை விற்பனை செய்வோர் அதிக லாபம் ஈட்டுவர். செய்தொழில் விருத்தியடையும். ஆடை, கடதாசி விற்பனையாளர்களுக்கும் நன்மை உண்டு.

***பெண்களுக்கு*** **:-** திருமண வயதிலிருப்பவர்களுக்கு சுப மங்கள காரியங்கள் நடக்கும். நினைத்தவை கைகூடி வரும். இல்லச் சிறப்பு உண்டாகும்.

***மாணவர்களுக்கு*** **:-** கல்வியில் முழுக்கவனத்துடன் கற்றுவர வேண்டும். விஞ்ஞானத்துறை மாணவர் நல்ல பெறுபேற்றைப் பெறுவார்.

***விவசாயிகளுக்கு*** **:-** பூமியால் இலாபமும், பயிர் விருத்தியும் உண்டாகும். மலர், இலை போன்றவற்றை பயிரிடுவோர் அதிக இலாபமீட்டுவார்.

***அரசியல்வாதிகளுக்கு*** **:-** வீண்பழி கேட்கும் நிலை ஏற்படும், தேவையற்ற விவாதங்களில் ஈடுபடாதீர்கள். வைகாயின் மேல் நற்பலன் உண்டாகும்.

***உத்தரம் (2ஆம், 3ஆம், 4ஆம் பாதம்)*** **:-** உடல் அசதியும் மனயோசனையும் இருக்கும். தொடர்பிரயாணங்களும், அலைச்சல்களும் ஏற்படும். தொழிலில் சமசித்தியுண்டாம். எடுக்கும் காரியங்களில் அவதானம் தேவை.

***அத்தம்*** **:-** நண்பர், உறவினரால் காரியானுகூலம் உண்டு. குடும்பத்தில் குதூகலம் நிலவும். நிலக்கீழ் பொருட்களால் லாபமும், நன்மைகளும் உண்டாகும். எடுக்கும் காரியங்கள் பலிதாகும். ஆரோக்கியத்தில் அவதானம் தேவை.

***சித்திரை (1ஆம், 2ஆம் பாதம்)*** **:-** உடல் ஆரோக்கியத்தில் அவதானம் தேவை. கடன் தொல்லைகள் அதிகமாகலாம். செய்தொழில் பாதிப்புக்கள் உருவாகும். கார்த்திகையின் மேல் நற்பலன் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துலாம்



இராசி மண்டலத்தில் ஏழாவது இராசியாகும். இவர்கள் அழகானவர்கள், நீதிமான்கள், கல்விச் சிறப்புடையவர்கள், நினைத்ததை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். சமூக ஏற்றத்தாழ்வுகள் பார்க்காமல் எல்லோருடனும் பழகக்கூடியவர்கள். கொள்கைப் பற்றாளர்கள். குடும்பப் பொறுப்பு மிக்கவராக திகழ்வார்கள். விவாதம், நியாயப் பேச்சுக்களில் வல்லவர்கள். அறிவியல் மருத்துவத்துறை வல்லுனர்களாகவும், துடிப்பான செயல் வீரர்களாகவும் விளங்குவார்கள். தனிமை விரும்பிகளாகவும் இருப்பார்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு நற்பலன்களை வாரிவழங்கும்.

புத்திவிருத்தியினால் பணவரவும், காரிய சித்தியும் உண்டாகும். சிலருக்கு வாக்குக் கலகங்களும், அலைச்சலும், செய்தொழில் பாதிப்பும் ஏற்படலாம். உற்றார் உறவினரால் கவலையும் ஏற்படலாம்.

ஆவணியின் மேல் அதிகார விருத்தியும், தரும காரியங்களில் நாட்டமும், பொருட் சேர்க்கையும் உண்டாம். புத்திரர், சிநேகிதரால் உதவி கிடைக்கும்.

**முருகப்பெருமானை வணங்கி வாருங்கள்**
**தீமைகள் அகன்று நன்மைகள் ஏற்படும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** பொருளாதார வளம் வலுப்பெறும். பணியாட்கள், சிநேகிதர் நன்மையையும் பாராட்டையும், உதவிகளையும் வழங்குவர். பெறுப்புக்கள் அதிகரிக்கும்.

***வியாபாரிகளுக்கு :-*** வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகர் அதிக இலாபம் அடைவர். நிதி நடவடிக்கையில் ஈடுபட்டோரும் அக இலாபம் அடைவர். நன்மையான காலமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பெண்களுக்கு*** :- வீண்பழிகேட்டலும், அவமானமும் ஏற்படலாம் ஆனியின் மேல் நற்பலனும் மனமகிழ்சியும் உண்டு. பிரயாணத்தின் போதும், புதிய இடங்களிலும் அவதானம் தேவை.

***மாணவர்களுக்கு*** :- கல்வியில் சிறந்த பெறுபேறு கிடைக்கும். எடுக்கும் கருமங்கள் நன்கு நிறைவேறும். வர்த்தகத்துறை மாணவர் நல்ல பெறுபேற்றைப் பெறுவர்.

***விவசாயிகளுக்கு*** :- செய்தொழில் விருத்தியாகி கால்நடைகள், பயிர்களின் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும். உங்களின் உழைப்பை குறுங்கால பயிர் செய்கையில் முதலிடுங்கள்.

***அரசியல்வாதிகளுக்கு*** :- மறைமுக எதிரிகளின் வஞ்சனையால் பாதிப்புக்கள் உண்டாகும். ஆவணியின் மேல் ஓரளவு நன்மையுண்டு. இராஜாங்கத்தால் தாக்கமுண்டாம்.

***சித்திரை (3ஆம், 4ஆம் பாதம்)*** :- பலவித திரவிய இலாபம், உடல் நலம் சீராக அமையும், செய்தொழில் விருத்தியாகும். கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை.

***சுவாதி*** :- உங்கள் தொழில் முயற்சிகளில் ஆர்வம்காட்டுவீர்கள். ஆன்மீக, தருமச் செய்கைகளில் நாட்டம் ஏற்படும். தன தாணிய விருத்தியும் இனத்தாற் நன்மையும் உண்டாகும்.

***விசாகம் (1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்கள்)*** :- இல்லத்தில் சிறப்பு இலட்மிகரமும் சுபீட்சமும் உருவாகும். மன மகிழ்ச்சியும், அறிவால் பாராட்டும் மேன்மையும் உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விருச்சிகம்

இராசி மண்டலத்தில் எட்டாவது இராசியாகும். இவர்கள் துரு துருத்த கண் அமைப்பைக் கொண்டவர்கள். சற்று உயரம் குறைவானவர்களாகக் காணப்படுவர். மற்றவர் அஞ்சும் அளவுக்கு பராக்கிரமசாலிகள். பூனை என்று நினைத்தால் புலியாகப் பாயும் இயல்பு கொண்டவர்கள். கௌரவம் மிக்கவர்கள். தீர்க்கமான கொள்ளைநெறி நிற்பவர்கள். புரட்சிகரமான கருத்தும் புதுமை எண்ணமும் கொண்டவர்கள். உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள். தலைமை தாங்கும் பண்பு கொண்டவர்களாகவும் காணப்படுவர். நீண்ட ஆயுளும் திடகாத்திரமான சரீரமும் உடையவர்கள். சிலர் முற்கோபக்காரர்களாகவும் காணப்படுவர். சிலர் கடலோரம் வசிக்கும் யோகம் உடையவர்கள். உங்கள் செயலில் வெற்றிக்கொடி நாட்டக்கூடியவர்கள் நீங்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு சமசுக வருடமாக மலர்கிறது. உடல் ஆரோக்கியம் வலுப்பெறும். புதிய பொறுப்புக்களும், அதிகார மேலாண்மையும் கிடைக்கும்.

நீண்டகாலத் திட்டங்கள் நிறைவேறும். கொடுத்த பொருட்கள், சன்மானம் என்பன வந்துசேரும். பொறுப்புக்களும் வேலைச்சுமையும் அதிகரிக்கும்.

சிலருக்கு தாரம், புத்திரரால் விரோதங்களும், மனக் கவலைகளும் ஏற்படலாம். உங்களுக்கு இடையூராக இருந்த பகைவரை வெல்வீர்.

சிலருக்கு தூர தேசத்திலிருந்து நன்மைகளும், ஆன்மீக பிரயாணங்களும் ஏற்படும்.

**குரு, சங்கம வழிபாடு நன்மையைக் கொடுக்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உத்தியோகத்தர்களுக்கு*** :- மேலதிகாரியினதும், இராஜாங்க நன்மைகளும் கிடைக்கும். செய்யும் தொழில் மேன்மையும், ஊதிய உயர்வும் உண்டாம். சகோதரரால் நன்மையான பிரயாணமும் உண்டு.

***பெண்களுக்கு*** :- உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. திருமண சுபகாரியங்கள் வைகாசி மாதம் வரை நிறைவேறும். பின் தடை தாமதங்களும், காரிய விக்கினங்களும் ஏற்படும்.

***மாணவர்களுக்கு*** :- பரீட்சையில் எதிர்பார்த்த சித்தியைப் பெறுவர். புதிய கற்கை நெறிகளை தொடருவீர்கள். விவசாய, விஞ்ஞானத் துறை மாணவர் பரிசு பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

***விவசாயிகளுக்கு*** :- எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்வோர் லாபம் அடைவர். பயிர்களில் பூச்சித் தாக்கத்தால் பாதிப்படைவீர்கள்.

***அரசியல்வாதிகளுக்கு*** :- இராஜமதிப்பு, வெளிநாட்டு பிரயாணங்கள் ஏற்படும். வாக்கு வசீகரமும், அதிகாரச் சித்தியும் உண்டாம்.

***விசாகம் (4ஆம் பாகம்)*** :- அதிக முயற்சிக்கு அற்ப லாபம் கிடைக்குமாம். சகோதரர்களால் உதவிகளும், தன, தானிய நன்மையும் ஏற்படும். ஆன்மீன யாத்திரைகள் தெய்வானுகூலத்தை ஏற்படுத்தும்.

***அனுசம்*** :- பொருட்களில் அவதானம் தேவை. உடல் நிலையில் நோய்த்தாக்கம் ஏற்படலாம். அவதானம் தேவை. போக்குவரத்திலும் அவதானம் தேவை. அதிக செலவுகளும், கடன் தொல்லைகளும் உருவாகலாம்.

***கேட்டை*** :- தொழிற்துறை விருத்தி அடையும். அன்னிய தேசத்தவர்களின் உதவிகள் கிடைக்கும். உடல் நலம் சிறக்கும். நுட்பமான பொருட்கள் வந்து சேரும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியைக் கொடுக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனு



இராசி மண்டலத்தில் ஒன்பதாவது இராசியாகும். இவர்கள் மானம் பெரிதென்று எண்ணக்கூடியவர்கள். ஒழுக்கம், உண்மைக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள். மற்றவர்களுக்கு போதனை செய்பவர்களாகவும், சுயநலமின்றிப் பழகக்கூடியவர்களாகவும், மனதில் ஏதாவது குறையை சுமந்த வண்ணமும் காணப்படுவர். எதனையும் ஆராய்ந்து முடிவு எடுக்கும் ஆற்றல் கொண்டவர்களாக விளங்குவர். வெடுக்கென்று பேசிடும் சுபாவம் சிலர் உடையவர்கள். ஆசிரியப்பணிக்கு உகந்தவர்கள். நுண்ணிய சிந்தனையாளர்கள் நீங்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு சாதக பாதக பலன்களைக் கொடுக்கும். இராஜாங்கத்தால் விக்கினம் ஏற்படலாம்.

கொடுக்கல் வாங்கல்களால் வாக்கு கலகங்கள் ஏற்படலாம். முன்பு செய்த தீய செயல்களால் மனக்கவலையும், பொருளாதார ரீதியில் பாதிப்புக்களையும் எதிர்கொள்ள நேரிடும். சிலருக்கு உடல் நிலையில் தாக்கம் உண்டு. குடும்ப பிணக்குகளும் உருவாகலாம். அவதானம் தேவை. தீய மனிதருடனான, ஒழுக்கக் கேடான உறவால் மனஸ்தாபம், அவமானம் ஏற்படலாம். அவதானம் தேவை.

வருட பிற்பகுதியில் தருமகாரிய சித்தி குடும்ப மகிழ்ச்சியும், தனதானிய லாபமும் உண்டு.

**குரு, சாது சன்னியாசிகளை போற்றி வணங்குங்கள்<br>சங்கடங்கள் குறையும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** நல்ல இடமாற்றமும், மேலதிகாரிகளின் பாராட்டுக்களும் கிடைக்கும். ஆர்வமும், உற்சாகத்துடனும் செயற்படுவீர்கள். போக்குவரத்தில் அவதானம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகளுக்கு*** :- செய்தொழிலால் வருமானம் அதிகரிக்கும். தரகு தொழில் செய்வோர் நன்மை அடைவர். புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

***பெண்களுக்கு*** :- இனசனக் கொண்டாட்டங்களும், சுப மங்கள நிகழ்வுகளும் நடக்கும். தொழில் மூலம் பொருள், புகழ் கிடைக்கும்.

***மாணவர்களுக்கு*** :- கல்வியில் அதிக அக்கறை அவசியம். ஆனியின் மேல் கல்வியில் ஊக்கமும் பாராட்டு சிறப்புச்சித்தியும் பெறுவீர்கள்.

***வியாபாரிகளுக்கு*** :- அரச உதவிகள் கிடைக்கும். கால்நடைகள் விருத்தியாகும். தானிய உற்பத்தியாளர்கள் அதிக இலாபம் ஈட்டுவர்.

***அரசியல்வாதிகளுக்கு*** :- பிரயாணங்களில் அவதானம் தேவை. மக்கள் அபிப்பிராயப் பேதப்படுவர், மன அமைதியின்மையும் கடன்படும் நிலையும் காணப்படும். அவதானம் தேவை.

***மூலம்*** :- தெய்வ அனுகூலத்தால் விரும்பியவை கிடைத்து மன மகிழ்ச்சி ஏற்படும். குடும்பத்தில் ஒற்றுமையும், சுப காரியங்களும் நிகழும். செய்யும் தொழில் விருத்தியடையும்.

***பூராடம்*** :- வருட ஆரம்பத்தில் அதிக மன யோசனை, அலைச்சல், கடன்படு நிலை, பிரயாசத்திற்கு அற்ப லாபம் கிடைக்கும். ஆவணியின் மேல் தெய்வானுகூலத்தால் தொழில் விருத்தி தன தானிய நன்மைகள் ஏற்படும்.

***உத்தராடம் (1ஆம் பாதம்)*** :- நண்பர், உறவினர்களால் நன்மைகள் ஏற்படும். மனச் சஞ்சலம் இருக்கும். வருட பிற்பகுதியில் சுப காரிய நன்மைகளும், இல்லச்சிறப்பும் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரம்



இராசி மண்டலத்தில் இந்த இராசி பத்தாவது ஆகும். நீங்கள் வசீகர முகத்தோற்றம் உடையவர்கள். பிடிவாத குணம் கொண்டவர்கள். கடின உழைப்பாளிகள். சுறுசுறுப்பாக செயற்படக் கூடியவர்கள் சிலர் பணிவு குணம் இல்லாதவர்களாகவும் காணப்படுவர். சொல்லுக்கும், செயலுக்கும் சிலருக்கு சம்பந்தம் இல்லாமல் போகலாம். தன் காரியத்திலே கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு இதுவரை இருந்து வந்த பின்னடைவுகளை சரிசெய்து முன்னேற்றத்தைக் கொடுக்கும் ஆண்டாக அமைகின்றது.

நோய்த் தாக்கத்திலிருந்து விடுபட இறை வழிபாடாற்றுங்கள். மனதில் சோகம், யோசனை மாறிமாறி இருக்கச் செய்யும். உறவினர், நண்பர்களின் உறவுகள் பலவீனமாக இருக்கும். புதிய வேலைகள் ஒப்பந்தங்களில் விழிப்பாக இருந்து வாருங்கள்.

தூரதேச பிரயாணம் மேற்கொள்பவர்கள் அவதானமாக இருக்க வேண்டும். திருமண சுபகாரிய நிகழ்வுகள் காலதாமதமாகும். ஐப்பசியின் மேல் பணவரவு, காரிய சித்திகள் உண்டாம்.

இடமாற்றங்கள் ஏற்படும், தனிமையான நிலைமை, வங்கி, தரகர்களிடம் கடன் எடுக்கும் நிலை ஏற்படலாம். முன்பின் அதிகம் அறிமுகம் இல்லாதவர்களிடத்தில் அவதானம் தேவை.

**விநாயகரை வணங்கி வாருங்கள்**
**இடையூறுகள் நீங்கி நன்மை பெறுவீர்கள்**

***உத்தியோகத்தர்களுக்கு*** :- தொழில் இடத்தில் அலைச்சலும், நிம்மதிக் குறைவும் ஏற்படலாம். சினேகிதரால் இலாபமும், மன மகிழ்ச்சியும் உண்டாம். ஐப்பசியின் மேல் நற்பலன் உண்டு.

***வியாபாரிகளுக்கு*** :- புதிய திட்டங்கள் தொடங்குவதை ஆவணியின் மேல் செய்யுங்கள். தூர தேசப் பிரயாணங்கள் அமையும். வாடிக்கையாளரை தேடிச் சென்று விற்பனை செய்வோர் நன்மை அடைவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பெண்களுக்கு*** :- அவதானமாக இருக்க வேண்டிய காலம். உற்றார், உறவினரின் வெறுப்புக்கு உள்ளாகுதல். கண், குருதி போன்றவற்றில் பாதிப்புக்கள் உருவாகலாம். உடல் மெலிவு தீயோரின் சேர்க்கையால் பாதிப்பும், வீண்பழியும் ஏற்படலாம். அவதானம் தேவை.

***மாணவர்களுக்கு*** :- கல்வியில் அதிக கவனம் செலுத்தி கற்க வேண்டிய காலமாகும். சோம்பலும், வீண் பொழுதுபோக்குகளிலும் நாட்டம் செல்லும். முயற்சிக்கு ஏற்க விளைவு இருப்பதால் ஊக்கம் தேவை.

***வியாபாரிகளுக்கு*** :- பயிர் விளைவுகள் மந்தமாக இருக்கும். புதிய ஒப்பந்தங்களில் அவதானம் தேவை. நீரில் வளர்ப்பு லாபத்தைக் கொடுக்கும். அடிக்கடி பிரயாணங்கள் ஏற்படும்.

***அரசியல்வாதிகளுக்கு*** :- எடுக்கும் கருமங்களில் தடை, தாமதங்கள் உண்டாகும். பகைவரால் இடையூறுகள், அலைச்சல்கள் மிகும் காலமாகும். ஆவணியின் மேல் நற்பலன்கள் நடக்குமாம்.

***உத்தராடம்*** :- உங்கள் அறிவால் நன்மை ஏற்படும். குருதி, வயிறு தொடர்பான ரோகங்கள் ஏற்படலாம். வைத்திய சிகிச்சை பெற வேண்டி ஏற்படும். காரிய சித்தியும், தன, தானிய நன்மையும் வெளியோரால் ஏற்படும்.

***திருவோணம்*** :- பொருட்களில் அவதானம் தேவை. தேக மெலிவும், வாய், கால் ஆகிய இடங்களில் ஓமோன்களின் சுரப்பினால் நோய்த்தாக்கம் ஏற்படலாம். குடும்பநிலையில் அவதானம் தேவை. கடன்படும் நிலையும் செலவுகளும் அதிகரிக்கும்.

***அவிட்டம்*** :- சினேகிதர், சகதொழிலாளர்கள், உறவுகளால் விரோதமும் நன்மையும் ஏற்படலாம். அவர்களால் மனச்சஞ்சலம் உருவாகும். ஆண்டு பிற்பகுதி திரவிய லாபமும், உடல் ஆரோக்கிய விருத்தியும் உண்டாம். எடுக்கும் முயற்சியில் அவதானம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கும்பம்



இராசி மண்டலத்தில் பதினொராவது இராசியாகும். நீங்கள் உறுதியான கொள்கை வழி உடையவர்கள். தலைமை தாங்கும் பண்பு கொண்டவர்கள். செயற்கரிய காரியங்களை செய்து முடிப்பவர்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதிலும் ஊருக்கு உழைப்பதிலும் பெருமிதம் காண்பீர்கள். ஒழுக்க நெறியும் எவரையும் தம்வசப்படுத்தக்கூடிய வசீகரப் பேச்சாற்றலும் உள்ளவர்கள். யோகஞானசாதனையாளர்கள். பிறரின் வெற்றிக்கா உங்கள் சுயநலம் கருதாது உங்கள் செல்வம், நேரம் என்பவற்றை செலவு செய்யும் பொது நலத் தொண்டர் நீங்களே!

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு லாபகரமானதாக அமைகின்றது. ஆன்மீக தரும் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். சிலருக்கு உடல் மெலிவும், மனப் பயமும், தேசாந்திர பிரயாணங்களும் ஏற்படும்.

இனசனம், நண்பர் பொறாமையால் கஷ்டநிலை தோன்றலாம். ஆயுதம், பகைவர், திருடர்களிடம் விழிப்பாக இருந்து வாருங்கள். சுப செலவுகள் அதிகரிக்கும். பல இடங்களில் புதிய கடன்படும் நிலை உருவாகலாம்.

உங்கள் குலதெய்வீக வழிபாட்டினால் தீய பலன்களில் இருந்து விடுபட்டு காரியானுகூலம் பெறுவீர்கள். பூமியால் லாபமும், அறிவு மேன்மையால் நன் மதிப்பும் பாராட்டும் பெறுவீர்கள்.

**சண்முகரை வணங்குங்கள் சங்கடங்கள் தீர்ந்து மங்களங்கள் உருவாகும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** அதிகார சித்தி ஏற்பட்டு, இடமாற்றங்களும் அனுகூலங்களும் ஏற்படும். பணிச்சுமை அதிகரிக்கும். இதனால் சிலருக்கு கோப மிகுதி ஏற்படலாம். அவதானம் தேவை.

***வியாபாரிகளுக்கு :-*** நீரில் விளைபொருட்களால் ஆதாயமும் வெளிநாட்டு நூதனப் பொருட்களால் நன்மையும் இலாபமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரிக்கும். வரவை விட செலவு அதிகமாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

***பெண்களுக்கு*** :- மன யோசனை அதிகரிக்கும். கால், வயிறு ஆகிய இடங்களில் ரோகங்கள் ஏற்படலாம். ஆனியின் மேல் ஆடை, ஆபரண சேர்க்கையும் உண்டாம்.

***மாணவர்களுக்கு*** :- கல்வியில் அக்கறை செலுத்த வேண்டும். போக்குவரத்தில் அவதானம் தேவை. பொருட்கள் களவு போகலாம். விஞ்ஞானத்துறை மாணவர் நன்மை அடைவர்.

***விவசாயிகளுக்கு*** :- பயிர்களின் விளைச்சல் அதிகரிக்கும். குறுங்கால பயிர் செய்வோர் மிகுந்த லாபம் அடைவார். காய்கறி பயிர் செய்கையினர் லாபமும், சிறப்பும் பெறுவார்.

***அரசியல்வாதிகளுக்கு*** :- எடுக்கும் காரியங்களில் வருட ஆரம்பத்தில் இடையூறுகள் இருக்கும். மனக்கவலை அதிகரிக்கும். இராஜாங்க அழுத்தங்கள் ஏற்படலாம். ஆவணியின் மேல் மிகச் சிறப்பான காலமாகும். மக்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

***அவிட்டம் (3ஆம், 4ஆம் பாதங்கள்)*** :- இனசனம், உற்றம், சுற்றத்தாரால் நன்மைகள் உண்டு. பிரயாணங்கள் ஏற்படும், வெளிநாட்டுப் பொருட்கள் கிடைக்கும். செய்தொழில் ஊக்கமும், தருமச் செய்கையும் உண்டாம்.

***சதயம்*** :- இனசனக் கொண்டாட்டம், தொழில் சிறப்பு, உடல் நலவிருத்தி, வாகன யோகம், சுபமங்கள நிகழ்வுகள் நடைபெறுதல். ஆன்மீக, தெய்வானுகூலத்தால் நன்மைகள் உருவாகும்.

***பூரட்டாதி (1ஆம், 2ஆம், 3ஆம் பாதங்கள்)*** :- வருட ஆரம்பத்தில் வரவுக்கு மீறிய செலவு உண்டாகும். காரிய தாமதமும், உடல்மெலிவும், நோய்த்தாக்கங்களும் ஏற்படலாம். ஆவணியின் மேல் தெய்வானுகூலத்தால் தொழில் விருத்தி, இலட்மீகரமும், காரியசித்தியும் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீனம்

இராசி மண்டலத்தில் பன்னிரண்டாவது ராசியாகும். நீங்கள் பரந்த நோக்கம் உடையவர்கள். போதனை செய்யும் தலைமைப் பண்பு இருக்கும். அமைதியாக பேசாமல் இருப்பீர்கள். சிலர் உறுதியான மனநிலை இல்லாது காணப்படுவார். சொல்லிலும் பார்க்க செயலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். ஆன்மீக குணம் கொண்டவர்களாகவும் ஆராய்வாளராகவும் காணப்படுவீர்கள். வட்டமான முக வடிவுடையவர்கள், கவர்ச்சியாக பேசி யாரையும் நட்பாக்கிக் கொள்பவர்கள். அறிவு, வியாபாரம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவீர்கள். உங்களின் மனச்சஞ்சலம் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். தாய்வீட்டுப் பாசம் அதிகம் உடையவர்கள் நீங்கள்.

பிறக்கும் சார்வரி புத்தாண்டு உங்களுக்கு சமசுக ஆண்டாக அமைகின்றது. இனசன உறவில் அவதானம் தேவை. உடல் உபாதைகள் படிப்படியாக தீரும். வாகன லாபம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும்.

ஆனி மாதத்தின் மேல் நற்பலன்கள் அதிகரிக்கும். செய்காரியங்களில் அவதானம் தேவை. இல்லையேல் பொருட்சேதம் உண்டாகலாம்.

பகைவர், திருடர், ஆயுதம், இராஜாங்கம் ஆகியவற்றால் கஷ்டங்கள் உருவாகக்கூடும். வெளிநாட்டு உதவிகள் சிலருக்கு வந்துசேரும். அன்னியரால் பாராட்டு, தன, தானிய லாபம், ஆடை, அணிகலன்கள் ஆகியன சேரும்.

**குருவானவர்களையும், அஞ்சநேயரையும் வணங்கி வாருங்கள் நன்மை நாடி வரும்**

***உத்தியோகத்தர்களுக்கு :-*** அரசாலும் மேலதிகாரிகளாலும் ஒத்துழைப்பும், பாராட்டும் கிடைக்கும். நிதி அனுகூலமும் உயர்ச்சியான பலன்களும் உண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***வியாபாரிகளுக்கு*** :- வியாபார நடவடிக்கைகள் பலமடையும். கொடுக்கல், வாங்கல்கள் சிறப்பாக நடைபெறும். அழகுசாதனப் பொருட்கள், விற்பனையாளர் அதிக லாபம் அடைவார்.

***பெண்களுக்கு*** :- இனசன விரோதமும், உடல் மெலிவும் மனக்கிலேசங்களும் வருட ஆரம்பத்தில் இருக்குமாம். சினேகிதரிடத்தில் அவதானம் தேவை. ஐப்பசியின் மேல் நற்பலன்களாக இல்லச்சிறப்பு, தொழில் மேன்மை உண்டாம்.

***மாணவர்களுக்கு*** :- கலைத்துறை மாணவர் சிறந்த பெறுபேற்றை அடைவார். இராஜாங்க மதிப்பு மரியாதை கிடைக்குமாம். உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைக்கும்.

***விவசாயிகளுக்கு*** :- பயிர் செய்கை விருத்தியாகும். லாபம் அதிகரிக்கும். மஞ்சள், தானியங்கள், விளைபொருட்களை உற்பத்தியாக்குவோர் அதிக லாபம் ஈட்டுவார்.

***அரசியல்வாதிகளுக்கு*** :- மக்களின் நல்ஆதரவு பெருகும். உடல் உள்ளத்தில் புதிய உற்சாகமும் அதிகார விருத்தியும் உண்டாம்.

***பூரட்டாதி (4ம் பாதம்)*** :- முயற்சியில் காரிய தாமதங்களும், அதிக பொருட் செலவும் ஏற்படும். ஆவணியின் மேல் தன தானிய நன்மையும் சுபமங்கள நிகழ்ச்சிகளை நடாத்தும் பொறுப்புக்களும் வரும்.

***உத்தரட்டாதி*** :- எடுக்கும் காரியங்களில் த்டை தாமதங்கள் ஏற்படும். ஆவணியின் மேல் காரியசித்தி ஏற்படும். நண்பர்களால் நன்மையும் திரவிய லாபமும் ஏற்படும்.

***ரேவதி*** :- செய்தொழில் விருத்தி ஆரம்பிக்கும். முயற்சியும் சித்திக்கும். தெய்வானுகூலத்தால் திரவிய லாபமும் மனமகிழ்ச்சியும் உருவாகும். கார்த்திகையின் பின் பொருட் சேதமும், காரியத் தடைகளும் உருவாகும். பயணங்களில் அவதானம் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஏனைய ஆன்மீக நூல்கள்

- சூரிய வழிபாடு
- சீரடி சாயி பாபா
- வைரவர் வழிபாடு
- விநாயகர் வழிபாடு
- மானுடமும் சோதிடமும்
- ஈழத்தில் நாக வழிபாடு
- பஜனைப் பாடல்கள்
- கோபெருஞ் செல்வம்
- ஆஞ்சநேயர் வழிபாடு
- சந்திர வழிபாடு
- நடராஜர் வழிபாடு
- செந்தமிழ் முருகன்

## சோதிட சேவைகள்

- ஜாதகக் குறிப்பு எழுதுதல்
- மனையடி சாஸ்திரம்
- கிணற்றுக்கு நிலையம் எடுத்தல்
- திருமணப் பொருத்தம் பார்த்தல்
- சோதிட ஆலோசனைகள்

அச்சுப்பதிப்பு: ஹரபன் பிறிண்டேர்ஸ்
021 225 5566 | 077 662 4386

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org